உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.603/2023

பெயர் :ரம்ஜான்பேகம்(அ.சா.1)
தகப்பனார் பெயர் :
கணவர் பெயர் :இஸ்மாயில் சேட்
வயது :40
கிராமம் :நத்தம்
வட்டம் :நத்தம்
தொழில் :பெட்டிக்கடை

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

03.06.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரி என் கணவர் ஆவார். சுமார் 14 வருடத்திற்கு முன்னர் எனக்கும், என் கணவரான ஆஜர் எதிரிக்கும் இடையே சொக்கலிங்கபுரத்தில் உள்ள என் அம்மா வீட்டில் வைத்து சண்டை நடந்தது. சண்டையில் என் கணவர் என்னை கீழே தள்ளிவிட்டார். காய்கறி நறுக்கி கொண்டிருந்த அரிவாள் மனையில் நிலைதடுமாறி கீழே விழுந்ததில் என் வயிற்றில் காயம் ஏற்பட்டது.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

எனது கணவருக்கு குடிபழக்கம் உள்ளது என்றால் சரிதான். நான் திருமணமான புதிதில் நத்தம் அருகே குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். அப்போது என் கணவருககும் இடையே தகராறு ஏற்படுவது வழக்கம் என்றால் சரிதான். எங்களுக்குள் ஏற்படும் தகராறுகளை ஜமாத்தில் வைத்து சமரசம் பேசுவது வழக்கம் என்றால் சரிதான். சமாதானம் செய்ய முடியாத காரணத்தினால் 27.08.2011 அன்று நான் என் அம்மா வீட்டிற்கு சென்று அங்கு இருந்தேன் என்றால் சரிதான். அதன்பிறகு என் கணவர் என்னை தொடர்பு கொண்டு நான் ஒழுங்காக இருப்பதாகவும், வேலைக்கு செல்வதாகவும் கூறினார் என்றால்ச ரிதான். நான் ரம்ஜான் நோன்பு

மேற்கொண்டு வருவதால் என் கணவர் தாம்பத்திய வாழ்க்கைக்கு அழைக்கும் போது நான் மறுத்துவிட்டேன் என்றால் சரிதான். அதனால் கோபமுற்ற என் கணவர் ஆடு உரிக்கும் கத்தியை கொண்டு என்னை வயிற்றில் குத்திவிட்டார் என்றால் சரியல்ல. சாட்சியிடம் மேற்படி சான்று பொருள் கத்தி காட்டப்பட்டு சாட்சி அதை இல்லை என்று மறுத்துவிட்டார். சாட்சியிடம் புகார் வாக்குமூலம் காட்டப்பட்டு அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்று மறுக்கிறார். நானும் என் கணவரும் தற்போது ஒன்றாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான். நானும் என் கணவரும் தற்போது கணவன் மனைவியாக சேர்ந்து வாழ்ந்து வருவதால் உண்மையை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.06.03 19:31:01 +0530

Assistant Sessions Judge
Melur